

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.1.2026) சென்னை எம்.ஜி.எம். பீச் ரெசார்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படும் 5150 டிரையத்லான் சென்னை 2026 போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, திருப்போரூர் ஒன்றிய குழு தலைவர் எஸ்.ஆர்.எல். இதயவர்மன் உள்பட போட்டியின் நிர்வாகிகள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உடனிருந்தனர்.

## சேலம் மாவட்டத்தில் – ‘உங்கள் கனவ சொல்லுங்கள்’ திட்டத்தின் கீழ்

# 9.71 லட்சம் குடும்பங்களுக்கான கணக்கெடுப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், ஜன 12-

முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூரிலிருந்து காணொலி காட்சி வாயிலாக “உங்கள் கனவை சொல்லுங்கள்” திட்டத்தின் கீழ் விரிவான கணக்கெடுப்பு பணியினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து சேலம் மாவட்டம், ஓமலூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பங்கேற்றார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூரிலிருந்து காணொலி காட்சி வாயிலாக “உங்கள் கனவை சொல்லுங்கள்” திட்டத்தின் கீழ் விரிவான கணக்கெடுப்பு பணியினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், எம்.ஆர்.பி முத்து மஹால் எதிரில் அமைந்துள்ள மைதானத்தில், இந்நிகழ்ச்சி சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒரு வரலாற்று நிகழ்வாக “உங்கள் கனவை சொல்லுங்கள்” என்ற திட்டத்தினை அறிவித்து இன்றயை தினம் 09.01.2026 திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி ஊராட்சியில் தொடங்கி வைத்துள்ளார்கள்.

இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் அவர்கள் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், தமிழ்நாடு அரசால் பயன்பெற்ற திட்டங்கள், பயன்பெற்ற திட்டங்களில் குடும்பத்தினர் மிகவும் பயனுள்ளதாக கருதும் மூன்று திட்டங்கள் மற்றும் 2030 ஆம் ஆண்டிற்குள் அரசு பூர்த்தி செய்ய வேண்டிய முதன்மையான மூன்று தேவைகளை (திட்டங்கள்) கணக்கெடுப்பு படிவம் மூலம் பெற்று இதற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மொபைல் ஆப் மூலம் தன்னார்வலர்கள் கொண்டு பதிவு செய்து அதன் அடிப்படையில் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் பிரத்யேக ‘கனவு அட்டை” வழங்கப்படும்.

இதன் மூலம் ஊரக மற்றும் நகரப்புற பகுதி குடும்பங்களின் தேவைகளை அறிந்து தொலைநோக்கு அறிக்கை (Vision Document) தயார் செய்யப்பட்டு, அதன்படி தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, சேலம் மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளில் உள்ள 6.50,560 குடும்பங்களிலும், நகரப் பகுதிகளில் 3,20.685 குடும்பங்களிலும் மொத்தம் 9.71.265 குடும்பங்களுக்கான கணக்கெடுப்பு இன்று துவங்கி 31.01.2026 வரை நடைபெறும். இதற்கென நியாய விலைக்கடை வாரியாக 2,315 தன்னார்வலர்கள் மற்றும் 629 மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் ஓமலூர் வட்டம், கோட்ட மேட்டுப்பட்டி ஊராட்சி, அண்ணா நகர் பகுதியில் தன்னார்வலர்களுடன் இணைந்து “உங்கள் கனவை சொல்லுங்கள்“ திட்டத்தின் கீழ் கணக்கெடுப்பு படிவங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) விவேக் யாதவ், வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர் மா.ஜெய்கணேஷ் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ - இரா.நரேந்திரன் முன்னிலை! சர்வஜெயா தாஸ் நரேந்தின் எம்.சி. தலைமையில்

# பெரம்பூர் 44 வது வார்டில் கோலப் போட்டி - கழக நிர்வாகிகள் - முன்களப் பணியாளர்களுக்கு பொங்கல் தொகுப்பு!

## அமைச்சர் பி,கே,சேகர்பாபு வழங்குகிறார்! மேயர் பிரியா ராஜன் - கலாநிதி வீராசாமி எம்,பி, பங்கேற்பு!

சென்னை, ஜன. 12-

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி, 44 வது வார்டில் திராவிட பொங்கல் விழா 2026 முன்னிட்டு மாபெரும் கோலப் போட்டி, கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள், முன்களப் பணியாளர்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கும் விழா இன்று (12.01.2026 - திங்கட்கிழமை) மாலை 3 மணியளவில்,சென்னை,வியாசர்பாடி,100 அடி ரோடு, ஆசிரியர் தெருவில் நடைபெறுகிறது.

44 வது வார்டு மாமன்ற உறுப்பினர், பெருநகர சென்னை மாநகராட்சி வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழுத் தலைவர் சர்வஜெயா தாஸ் நரேந்தின் தலைமை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. நரேந்திரன், தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் க.ஜெயராமன், வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் அ.முருகன், மாவட்டப் பொருளாளர் வி. தயாளன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

44 (அ) வட்டக் கழகப் பொறுப்பாளர் எஸ்.அருள், 44 வது வட்டக் கழகச் செயலாளர் த.ஆறுமுகம், மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் கோ.சதீஸ், பகுதிப் பொருளாளர் வி.எஸ்.பிரபு ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபிநேசர், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் தா. இளைய அருணா எம்.சி, தொகுதி பார்வையாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின், பி.டி. பாண்டிசெல்வம், என்.மருதுகணேஷ், இரா.கருணாநிதி, ந. மனோகரன், நேதாஜி யு. கணேசன் எம்.சி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் டி. கமலக்கண்ணன், ப.மதிவாணன், ஏ.தமிழ்செல்வன், க.அமுல், தெற்கு பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள் ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, க.பாபு, ஜி.மாரிமுத்து, கே.தினகரன், வி.முருகன், வடக்கு பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள் இரா.அரிதாஸ், சி.எஸ்.இரவி, என்.கார்த்தீபன், மு.உமாபதி, கே.இ. செந்தமிழ்அரசு, கே.வி.ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாவட்டப் பிரதிநிதி கே. பரத் நன்றி கூறுகிறார்.



சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி திமுக சார்பில் தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு கழகத் தோழர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா பகுதி செயலாளர் எஸ்.முரளி தலைமையில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தொகுதி பார்வையாளர் கோவி.லெனின் ஆகியோர் வழங்கினர். உடன் நந்தனம் கி.மதி, எஸ். முனுசாமி, சிமென் கோ. சேகர், பி. எல். தாஸ் ஏ.குமாரி, எல். உதயகுமார், ஏ.தாஸ், மா.பா.அன்பு, அ. தவநேசன், கோ. கண்ணன், பா.பொன்னுசாமி, விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., அ.ரேவதி எம்.சி. மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிட தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திமுக சார்பில் தலைமை கழகத்தால் மற்றும் மாவட்டக் கழகத்தால் வழங்கப்படும் பொங்கல் பரிசினை ஆர்.கே.பேட்டை கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு ஆகிய ஒன்றியத்திற்கு உட்பட்ட ஒன்றிய செயலாளர்கள் ஒன்றிய நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகளுக்கு பூத் கமிட்டி BLA2, BLC, BDA உள்ளிட்டவருக்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ வழங்கினார் உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சி. என்.சண்முகம், பெ.பழனி, பா.சம்பத், மா.இரகு, உள்பட பலர் உள்ளனர்





சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையின் சார்பில் ”தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம் என்ற தலைப்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2026 விழா கண்காட்சி முகாம் நடைபெற்றது இதில் பங்கேற்ற கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நினைவு பரிசு வழங்கினார்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# “அன்னம் தரும் அமுதகரம்” 326 வது நாள்!

## திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை, ஜன. 12-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 326ஆம் நாளான - கழகத்த லைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (11.01.2026), திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 74 அ, சுப்புராயன் தெரு, (மணிக்கூண்டு) அருகில், ஓட்டேரி. 2) வட்டம் 71, வடிவேலு தெரு, நெல்வயல் சாலை சந்திப்பு, பெரம்பூர் சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா. ராஜ்முகமது, திரு.வி.க.நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ. டீக்கா, எம்.இசட்.அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி. கிருஷ்ணகுமார், எம்.தமீம், பொல்லு டி.சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், எஸ். வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## எம்.இ.தேவநிதி நிகழ்ச்சி ஏற்பாடு! இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# எழும்பூர் 58 வது வட்டத்தில் தமிழர் திருநாள் சமத்துவப் பொங்கல் விழா!

## அமைச்சர் பி.கே.சேகர் பாபு - தயாநிதி மாறன் எம்.பி. தொடங்கி வைக்கின்றனர்!

சென்னை,ஜன.12-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்குப் பகுதி எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, 58 வது வட்டத்தில் தமிழ்ப்புத்தாண்டு, சமத்துவ பொங்கல் விழா திராவிடப் பொங்கல் விழா (வியாழக்கிழமை) 15.1.2026 காலை 11 மணிக்கு தி.மு.க. மற்றும் தாக்கர் தெரு குடியிருப் போர் இணைந்து நடத்தும் பொங்கல் விழா நிகழ்ச்சியை தலைமைக் கழகப் பேச்சார் எழும்பூர் எம்.இ.தேவநிதி ஏற்பாட்டில் நடைபெறுகின்றது.

15.1.2026 அன்று காலை 6 மணிக்கு, கோலப்போட்டியும், 11 மணிக்கு இளைஞர் மற்றும் ஆண், பெண்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் இசை நாற்காலி, உரியடித்தல், கயிறு இழுத்தல் போட்டி உள்ளிட்ட போட்டிகள் நடைபெறுகின்றது.

இப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா பொங்கல்(15.1.2026) அன்று காலை 11 மணிக்கு தாக்கர் தெருவில் நடைபெறுகின்றது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக மாவட்டக் கழகச்செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர் பாபு பரிசுகள் வங்கி சிறப்பிக்கிறார். இவ் விழால் தயாநிதி மாறன் எம்.பி., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, டி.குணசுந்தரி பாஸ்கர்,ஜெ. கிளாடிஸ் ஜேக்கப், இ.இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மேலும் இவ் விழாவில் கே.எஸ்.எம்.நாதன், கோ.ஏகப்பன், கோ.மணி, வி.சுதாகர், புரசை ஜி.தாமோதரன்,ஜெ. கிருஷ்ணமூர்த்தி,ஜெ.விஜயகுமார்,பு ரசை எஸ்.குமார், வெ.மருதன், இரா.கலைவேந்தன், வி.விஜயகுமார், இராஜேஸ்வரி ஸ்ரீதர், கே.சீனிவாசன், எல்.சுகுமாறன், ஜெ. சிலம்பரசன், பி.எம்.ஜெயலட்சுமி, து.களரிமுத்து, பா.நாராயணன், ஜெ.சரவணன், ஜெ.வினாயகம், எஸ்.தினகரன், எஸ்.கண்ணன், தா.பாபு சேகர், மா.காந்தி, டி.விஸ்வநாதன், ஆரோக்கியம், ஆர். புருஷோத்தமன், கி.புஷ்பராஜ், மு.கமலக்கண்ணன், ரா.வெற்றிவேல், வி.நாகராஜ், ஆர்.தர்மதுரை, ஏ.கவிதா,அ.பிரம்ம தேவன்,மகாலட்சுமி,பி.எஸ். வைஷ்ணவி,அசினா பேகம், ஏ.பாலாஜி, நேருபிரபாகரன்,ச. கோ.கோமகன்,ஆ.நித்தியராஜ், வே.மோகன், டி.வடிவேலு, மு.கிருஷ்ணன், பூ.சத்தீஷ் குமார், மு.சரவண்குமார், எல். சுகுமாறன், எஸ்.சுரேஷ், அ. ஞானகுரு, எம்.நடராஜன், ஏ.சண்முகம், டி.சந்திரசேகர், இ.ஜெயகுமார், எஸ்.ஜெயகுமார், வி.கிருஷ்ணகுமார், என். அழகர் சாமி, ஆர்.உதயசங்கர், ஆர்.பூபதி, பி.ரவிச்சந்திரன், ஐ. பத்மநாபன், பி.செந்தில்குமார், எஸ்.குப்புசாமி, கே.விஸ்வ நாதன், ஜி.சதீஷ்குமார், பி.விஜயகுமார், டி.இளம்பரிதி, ராபர்ட் ஜான், எம்.நாகராஜன், ஒயிட்பில்ட் மொய்தீன்,ஜெ. மகேந்திரன்,எம்.எம்.மொய்தீன்,பஞ்சா எஸ்.அருண்,எஸ். தாரிக்,புரசை கே.மூர்த்தி,வே. பா.ரோஹித்குமார், நி.ஆஸ்டின்,தி.ராஜ்குமார், ர.நித்திஷ் கிரிதரன், வி.மகாதேவன், ச.சதீஷ், ச.சூர்யா, மு.உதயநிதி, அ.ஜெகன், ஏ.வேலவன், கே.கே. சீனிவாசபெருமாள், எம்.இ.மகேஷ்குமார், தெ. திவாகரன், சு.குணா, கபில்குமார், ஜோ.சந்தோஷ்குமார்,டி. சதீஷ்குமார்,ஜெ.ஜெய்குமார், ஆ.சூர்யா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

விழாவிற்கு வருகை தருவோரை தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி வரவேற்று நன்றி கூறுகிறார்.



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேரூராட்சியில் புதிதாக வாங்கப்பட்ட குப்பை அள்ளும் வாகனங்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, திருப்போரூர் ஒன்றிய குழு தலைவர் எஸ்.ஆர்.எல். இதயவர்மன், துணைத் தலைவர் சத்யா சேகர், திருப்போரூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் எம்.சேகர் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.



தமிழர் திருநாளை முன்னிட்டு திருவள்ளூர் தொகுதி திருவள்ளூர் நகர பகுதி சார்ந்த கழக நிர்வாகிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் சீருடை மற்றும் பொங்கல் பரிசு வழங்கினார். நகரக் கழகச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், உள்பட நகரக் கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள் நகர மன்ற உறுப்பினர்கள் கழக இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்